





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 03.04.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்










## இந்திய நிகழ்வுகள்

- 2019ம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் ஒட்டுமொத்த நாடும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாக வாக்களிக்க உள்ள நிலையில் தெலுங்கானாவின் நிஜாமாபாத் தொகுதி வாக்காளர்கள் மட்டும் வாக்குப்பதிவு சீட்டு மூலம் வாக்களிக்க உள்ளனர்.
  - நிஜாமாபாத் தொகுதியில் **185 வேட்பாளர்கள்** போட்டியிடுவதால் தேர்தல் ஆணையமானது **வாக்குச்சீட்டு** முறையை தேர்ந்தெடுத்துள்ளது.

- இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோர காவற்படை மற்றும் மொரீஷியஸ் கடலோர காவற்படை ஆகியவற்றிற்கு 100 போர் கப்பல்களை கட்டமைத்து வழங்கிய இந்தியாவின் முதலாவது கப்பல் கட்டும் தளமாக கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுமானம் மற்றும் பொறியாளர்கள் என்ற நிறுவனம் உருவெடுத்துள்ளது.
  - இது தற்போது தனது **100வது போர் கப்பலான "IN LCU – L 56" என்பதை உருவாக்கியுள்ளது.**

## உலக நிகழ்வுகள்

- **ரஷியாவிடமிருந்து 5ம் தலைமுறை சுகோய் - 57 ரக போர் விமானங்களை சீனா வாங்கவுள்ளது.** ரஷ்யாவின் "ரோஸ்டக் ஆயுத தளவாட" உற்பத்தி நிறுவனம் இந்த போர் விமானங்களை தயாரித்துள்ளது.
- குறிப்பு:
  - **இந்தியாவானது பிரான்ஸ் நாட்டிடமிருந்து ர·.பேல் ரக போர் விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.**

- ஜப்பானின் புதிய பேரரசராக, இளவரசர் **நரு ஹிடோ,** 2019 மே 1ம் தேதி முடிசூட உள்ளார். இவரது ஆட்சி காலம், **"ரெய்வா சகாப்தம்"** என அழைக்கப்படுகிறது.
  - ஜப்பானின் தற்போதைய சகாப்தம் **"ஹெய்சேய்"** ஆகும். அதன் பொருள் சமாதானத்தை அடைதல் என்பதாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தைவானில் நடைபெற்ற ஆசிய ஏர்கன் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் **இந்திய அணி 16 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தம் 25 பதக்கங்களை வென்றுள்ளது.**
  - **கடைசி நாளில், 10 மீட்டர் ஏர் ரைபிள் ஜூனியர் ஆண்கள் பிரிவில் இந்தியாவின் "யாஷ் வர்தன்" உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.**

## விருதுகள்

- மூத்த நடிகையான **"ரீட்டா மோரேனா"** 2019ம் ஆண்டிற்கான பீபாடி தொழில்சார் சாதனையாளர் விருதினை பெற்றுள்ளார். **(Peabody Career Achievement Award)**
  - இந்த விருதானது மின்னணு ஊடகத்தில் ஆற்றிய பணி மற்றும் பொறுப்பின் மூலம் அந்தத் துறையில் அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றவர்களுக்கு வழங்கப்படுவதாகும்.

## நியமனங்கள்

- சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (FIFA) முதல் இந்திய உறுப்பினராக **பிர:புல் பட்டேல் (Praful Patel)** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02**
  - உலகம் முழுவதும் மன இறுக்க கோளாறுடன் வாழும் மக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் **ஏப்ரல் 2 அன்று உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்படுகிறது.**
  - 2019ம் ஆண்டின் உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினத்தின் மையக்கருத்து :- **"Assistive Technologies, Active Participation"** (தொழில்நுட்ப துணையுடன், செயலில் பங்கேற்பு") என்பதாகும்.

WeShine Academy™